# பரீட்சகரின் அறிக்கை

## AA1 பரீட்சை – 2019 சனவரி

## (AA15) வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்

---

இவ்வினாப்பத்திரத்தின் நோக்கம், பாடத்தின் சகல பரப்புகளினதும் ஒட்டுமொத்த அறிவைப் பரீட்சிப்பதாக இருந்தது. ‘‘வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்’’ தொடர்பான நடைமுறை நிலைமைகள்கூட பரீட்சிக்கப்பட்டன. பரீட்சகரின் அறிக்கையினுடைய பிரதான நோக்கம், எதிர்காலப் பரீட்சைகளில் பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் பரீட்சார்த்திகளால் குறைவான புள்ளிகள் பெறப்பட்ட பாடப் பரப்புகள் மீது கவனத்தைச் செலுத்துவதாகும்.

மிகவும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளைத் தவிர, ஏனைய பரீட்சார்த்திகளால் இப்பரீட்சையில் நன்றாக விடையளிப்பதற்கு முடிந்திருந்தது. விடைகளிலிருந்து அவதானிக்கப்பட்ட பொதுவான ஒரு சில பலவீனங்கள் கீழே தரப்படுகின்றன:

### <u>பகுதி A</u>

### வினா இல. 01

இந்தப் பிரிவின் மூலம், வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும் பாடத்தின் முழுப் பகுதியும் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்தனர். மொத்தமுள்ள 100 புள்ளிகளில் 40 புள்ளிகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் 20 இற்கும் 30 இற்கும் இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினா இலக்கங்கள் **1.9, 1.11, 1.19** ஆகியவற்றுக்கு வெற்றிகரமாக விடை அளித்திருக்கவில்லை. வினாக்கள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு :

**1.9** பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் தொழிற்றுறையில் பிரவேசிக்கின்ற புதிய பிரவேசிப்பாளர்களுக்குக் காணப்படுகின்ற தடைகள் பற்றிய விழிப்புணர்வு காணப்படவில்லை. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடைக்குப் பதிலாக ‘‘பொருள் வேறுபாடு’’ என்ற விடையைத் தெரிவு செய்திருந்தனர்.

**1.11** அதிகளவான பரீட்சார்த்திகள் நிறுவனமொன்றில் அலுவலகத் தன்னியக்க முறைமை பொதுவாகப் பயன்படுத்தப்படும் மட்டத்தினை அடையாளம் கண்டிருக்கவில்லை, அவர்கள் இந்தக் குறித்த வினாவுக்காகத் தரப்பட்ட தெரிவுகளிலிருந்து சரியான விடையினைக் குறித்திருக்கவில்லை.

**1.19** பெரும்பாலான பரீட்சார்த்திகள் போட்டரின் பெறுமதிச் சங்கிலியின் முதன்மை நடவடிக்கைகள் பற்றி விளங்கிக் கொண்டிருக்கவில்லை. எனவே, அவர்கள் தவறான விடையினைத் தெரிவு செய்திருந்தனர்.

பரீட்சார்த்திகள் சுய கற்றல் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள் மீதான தங்களுடைய அறிவை மேம்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மேலே குறிப்பிட்ட வினாக்களைத் தவிர ஏனைய வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்தனர்.

## பகுதி B

இப்பகுதியானது விடையளிப்பதற்காக 04 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. அவை ஒவ்வொன்றுக்கும் 10 புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டிருந்தன.

## வினா இல. 02

### பகுதி (a)

இங்கு PEST பகுப்பாய்வு மீதான அறிவு சோதிக்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் **பகுதி (a)** இற்கு வெற்றிகரமாக விடையளித்து, அதற்குரிய 6 புள்ளிகளில் 3 தொடக்கம் 4 வரையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். வினாவுக்கு விடையளிக்கத் தவறியிருந்தவர்கள் SWOT பகுப்பாய்வு பற்றி எழுதியிருந்தனர். எனவே விடையளிப்பதற்கு முன்னர் வினாவை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்வது அவசியமானதாகும். அவர்களில் சிலர் ஒவ்வொரு மாறிகளுக்குமான உதாரணங்களைத் தந்திருக்கவில்லை.

### பகுதி (b)

இங்கு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் மீதான அறிவு சோதிக்கப்பட்டது. இவ்வினா சற்று இலகுவானதாக இருந்தது. பெரும்பாலானவர்கள் திருப்திகரமாக விடையளித்திருந்ததுடன், இவ்வினாவுக்கு விடையளித்திருந்தவர்கள் முழுமையான புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

## வினா இல. 03

இங்கு மனித வளத் திட்டமிடல் மற்றும் மொத்தத் தர முகாமைத்துவம் (TQM) என்பன பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைச் சோதிக்க எதிர்பார்க்கப்பட்டது.

### பகுதி - A

**(i)** மனித வலுத் திட்டமிடலின் நோக்கங்களை இனங்காண்பதற்குத் தேவைப்படுத்தப் பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் உரிய விடயங்களைக் குறிப்பிட்டு விடை எழுதியிருக்கவில்லை என்பதுடன் அவர்கள் தமது பொது அறிவுக்கு ஏற்ப இந்தப் பகுதிக்குத் தெளிவற்ற விடையினை எழுதியிருந்தனர். எனவே சுய கற்றல் புத்தகத்தை வாசித்து ஆழமான அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என பரீட்சார்த்திகளுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

**(ii)** இப்பகுதியில் நிறுவனமொன்றில் மிகையாகவுள்ள மனித வளங்களை எவ்வாறு சமாளிக்கலாம் என்பது பற்றிய அறிவு சோதிக்கப்பட்டது. பரீட்சார்த்திகள் உரிய விடயங்களைக் குறிப்பிட்டு விடை எழுதியிருக்கவில்லை என்பதுடன் அவர்கள் தமது பொது அறிவுக்கு ஏற்ப இந்தப் பகுதிக்குத் தெளிவற்ற விடையினை எழுதியிருந்தனர். எனவே சுய கற்றல் புத்தகத்தை வாசித்து ஆழமான அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என பரீட்சார்த்திகளுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது. இந்த வினாவுக்காக, பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் மொத்தமாகவுள்ள 5 புள்ளிகளில் 2 தொடக்கம் 4 வரையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

பகுதி - B

**(i)** இந்தப் பகுதி மொத்தத் தர முகாமையை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் மொத்தத் தர முகாமையின் கோட்பாடுகளை விளங்கிக் கொண்டிருக்கவில்லை. அவர்களில் மிகச் சிலர் சரியான விடையினை வழங்கியிருந்தனர். நிறுவனமொன்றின் மொத்தத் தர முகாமை தொடர்பான தங்களது அறிவினைப் பரீட்சார்த்திகள் மேம்படுத்த வேண்டுமென்பது இதன் மூலம் நிரூபணமாகிறது. குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடை அளிக்கவில்லை.

**(ii)** சேவைகளுக்கான தரத்தின் பரமானங்கள் பற்றிய அறிவு சோதிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் பரமானங்கள் பற்றி விளங்கிக் கொண்டிருக்க வில்லை என்பதுடன் அவர்கள் தெளிவற்ற விடைகளை வழங்கியிருந்தனர். எனவே மேலுள்ள வினாவுக்கான ஒட்டுமொத்த செய்லாற்றுகை திருப்திகரமாக இருக்கவில்லை. மிகச் சில பரீட்சார்த்திகள் மொத்தமுள்ள 10 புள்ளிகளில் 5 புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

## வினா இல. 04

இது நிறுவனத்தின் சந்தைப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் மொத்தமாகவுள்ள 10 புள்ளிகளில் 7 புள்ளிகளுக்குக் குறைந்த புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

பகுதி (a)

பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் பண்டக்குறியிடலின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொண்டிருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

பகுதி (b)

**(i)** பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் சந்தைத் துண்டமாக்கல் பற்றி விளங்கிக் கொண்டிருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(ii)** ‘‘சந்தைப்படுத்தலில் பயன்படுத்தப்படுகின்ற நிலைப்படுத்தல்’’ என்னும் பதம் பற்றிப் பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் அப்பதம் பற்றி விளங்கிக் கொண்டிருக்கவில்லை. அத்தகைய பரீட்சார்த்திகள் அவர்களுடைய பொது அறிவைக் கொண்டு இவ்வினாவை விளக்கியிருந்தனர். அவர்களில் பலர் நிலைப்படுத்தல் என்பதை சந்தையின் அமைவிடம் அல்லது இடம் என்றவாறு பிழையாக விளங்கியிருந்தனர். எனவே பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்காக சொற்பளவான புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

## வினா இல. 05

இங்கு தொழிற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான அறிவைச் சோதிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் மொத்தமாகவுள்ள 10 புள்ளிகளில் 5 தொடக்கம் 6 புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**பகுதி (a)**

இந்தப் பகுதி தொழிற்பாட்டு முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் பற்றிய அறிவைச் சோதித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் முக்கியத்துவத்தை விபரிப்பதற்குத் தவறியிருந்ததன் காரணமாக இவ்வினாவுக்கான 6 மொத்தப் புள்ளிகளில் 3 புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

**பகுதி (b)**

இந்தப் பகுதி வெளிமூலமிடலின் நன்மைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருக்கவில்லை என்பதுடன் ''வெளிமூலமிடல்'' என்னும் பதத்தை இனங்காணத் தவறியதன் காரணமாக இவ்வினாவுக்கு குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

## <u>பகுதி C</u>

இப்பகுதி 20 புள்ளிகளுக்காக 01 கட்டாய வினாவைக் கொண்டுள்ளது.

## வினா இல. 06

இது **''சீற்றா''** தொடர்பான வினாக்களை அடிப்படையாகக் கொண்ட விடய ஆய்வு வினாவாகும். இங்கு சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் மற்றும் மனித வள முகாமைத்துவம் ஆகியன பற்றிய அறிவைச் சோதிக்க எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்ததுடன் அவர்களில் பலர் மொத்தமாகவுள்ள 20 புள்ளிகளில் 12 இற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**பகுதி (a)**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தின்படி **சீற்றா**வில் **ரூபி**யின் மனக்குறைகளுக்கான காரணங்களைத் தெளிவாக எழுதியிருந்ததுடன் அவர்களில் பலர் மொத்தமாகவுள்ள 6 புள்ளிகளில் 5 இனைப் பெற்றிருந்தனர்.

**பகுதி (b)**

பொருத்தமானதொரு அபேட்சகர் தெரிவு செய்யப்படும்போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறையின் படிநிலைகள் பற்றிய அறிவைச் சோதிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு நன்றாக விடையளித்திருக்கவில்லை.

**பகுதி (c)**

இவ்வினா ''தரவுச் சுரங்கமிடல்'' என்பதன் அர்த்தத்தைச் சோதித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிப்பதற்குத் தவறியிருந்தனர். இது தரவுத் தளங்கள் தொடர்பில் பரீட்சார்த்திகளால் மிகக் குறைந்தளவான அறிவு வெளிக்காட்டப்படுவதை எடுத்துக் காட்டுகிறது. மிகச் சொற்பமான அளவு பரீட்சார்த்திகள் மாத்திரமே முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி (d)**

இந்தப் பகுதி **சீற்**றாவின் சந்தைப்படுத்தல் கலவையினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தை கருத்திற்கொள்ளாது சந்தைப்படுத்தல் கலவையினை விபரித்திருந்தனர். எனவே இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெறுவதற்கு பரீட்சார்த்திகளால் முடியவில்லை. எவ்வாறாயினும், அவர்கள் சந்தைப்படுத்தல் கலவை பற்றி எழுதியிருந்தனர். எனவே வினாவுக்கு விடையளிப்பதற்கு முன்னர் வினாவை நன்கு வாசித்து விளங்கிக்கொள்வது அவசியமானதாகும்.

- - -

**பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்**

1. வினாப்பத்திரத்தைக் கையில் எடுத்ததும் பரீட்சார்த்திகளுக்காகத் தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும். வினாப்பத்திரத்திலேயே விடை எழுத வேண்டாம்.

2. இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகத்தினால் வெளியிடப்பட்ட **சுய கற்றல் புத்தகம்** முழுமையான பாடத்திட்டத்தை உள்ளடக்கி சிறந்த வழிகாட்டல்களை வழங்கியிருப்பதால் அதிலிருந்து உச்சபட்ச பயனைப் பெற்றுக்கொள்க.

3. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.

4. பரீட்சை எழுதும்போது நேர முகாமைத்துவம் முக்கியமானது.

5. வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

6. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் மற்றும் உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

7. வினாப்பத்திரத்திலேயே விடைகளை எழுதி அதனை விடைத்தாளுடன் இணைத்து அனுப்ப வேண்டாம்.

8. கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு விடையளித்துப் பயிற்சி பெறுவதன் மூலம் நீங்கள் பாடம் சம்பந்தமான அறிவினை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன் விடைகளை எழுதுவதற்கான ஆற்றலும் கிடைக்கும்.

9. அறிவினை நிகழ்நிலைப்படுத்திக் கொள்வதற்காக அண்மையில் பிரசுரிக்கப்பட்ட சஞ்சிகைகள், கையேடுகள், பாடப்புத்தகங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துக.

10. வினாக்களுக்கு விடையளிக்காது இருப்பதற்கு முயற்சிக்க வேண்டாம். இப்பழக்கம் குறைந்த புள்ளிகளையே பெறுவதற்கு வழிவகுக்கும்.

11. நல்ல முன்னாயத்தத்துடன் பெரும்பாலும் பரீட்சையில் சித்தியடையும் நம்பிக்கையுடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * -